ஒதுக்கப்பட்டிருக்கிறன. ஐ.ஐ.டி. இந்திய அரசாங்கத்தின் உதவி பெற்று நடத்தப் பெறுவதிலும் பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறுர்கள். ரீஜினல் எஞ்சினியரிங் காலேஜிலும் 50 சதவிகிதம் பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கும், 50 சதவிகிதம் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஒதுக்கியிருக்கிறுர்கள். 180 இடங்களில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு 90 இடங்கள், பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு 90 இடங்கள், பிற மாநிலத்தில் இருப்பவர்கள் இங்கு வந்து கல்லூரியில் [illegible] இடம் [illegible] கோரிக்கையும் [illegible]

[illegible] பெரியநாயக்கன்பாளையத்துக்கு குடிநீர் வசதி

*625 வினு.—திரு. [illegible] சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொண்டாமுத்தூர் தொகுதியிலுள்ள, பெரியநாயக்கன் பாளையம் பஞ்சாயத்து குடிதண்ணீர் பிரச்னையைத் தீர்க்க பஞ்சாயத்து மூலமாகவும், ஊர் பொதுமக்கள் சார்பாகவும் கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வந்துள்ளது ?

(உ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ம் தேதியிலும் 1969-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ம் தேதியிலும் ஊராட்சித் தலைவர் மூலம் பொதுப்பணித்துறை அமைச்சரிடம் கோரிக்கைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

(உ) கோரிக்கைகளை நிறைவேற்ற இப்பொழுது வாய்ப்பு ஏற்படவில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியநாயக்கன் பாளையத்திற்குப் பவானி ஆற்றில் இருந்து தண்ணீர் கொடுக்கும் திட்டம் தயாரிப்பதாகக் கேள்வி. அந்தத் திட்டத்தை இந்த ஆண்டு கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி மன்றத் தலைவர் பவானி ஆற்றுத் தண்ணீரில் தங்களுக்கும் பங்கு வேண்டுமென்று கேட்டார்கள். அதிலிருந்து தண்ணீர் கொடுப்பதற்கான கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சிங்காநல்லூருக்குக் குடிதண்ணீர்த் திட்டத்திற்காகக் குந்தாவிலிருந்து திட்டம் தீட்டப்படுகிறது. அந்தத் திட்டம் வரும்போது சிங்காநல்லூரின் பக்கத்துப் பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுப்பதோடு பெரியநாயக்கன்பாளையத்திற்கும் கொடுக்க முடியுமா என்பது பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. எம். பூபதி : அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது குந்தா நீர்த் தேக்கத்திலிருந்து மற்றப் பகுதிகளுக்கெல்லாம் தண்ணீர் கொடுக்கப்படும், சிங்காநல்லூருக்குக் கொடுக்கப்படும் என்று சொன்னுர்கள். ஆகவே அந்த விஷயம் உடனடியாக அமல் நடத்தப்படுமா ? தண்ணீர் அதிகமாகத் தேங்கிக் கிடக்கிறது என்று மத்திய சர்க்காரே ஒத்துக்கொண்டு நம் அரசுக்கும் அதைச் சொல்லியிருக்கிறதே. ஆகவே அதுகுறித்து உடனடியாக அந்த நீர்த் தேக்கத் தண்ணீரை குடிநீருக்காவது உபயோகப்படுத்த உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : குந்தாவிலிருந்து குடிநீர் கொண்டுவருகிற முயற்சிதான் ஆராயப்பட்டு வருகிறது. எல்லாத் துறையினரின் ஒப்புதல் பெற்ற பிறகுதான் நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும். எதற்கும் ஒரு ஆல்டர்னேட்டிவ் திட்டம் இருக்க வேண்டுமென்பதற்காக அதற்கு அனுமதி கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்படுமானுல் பவானியில்

இருந்து கொண்டுவருகிற அத்தகைய திட்டமும் ஆராய்ச்சி செய்யப்படு வதற்காக உருவாக்கப்பட்டிருக்கிறது. இப்போது குக்காவிலிருந்து [illegible] கொண்டுவருகிற முயற்சிதான் இருக்கிறது. [illegible] பல துறைகளிலிருந்து [illegible] [illegible] த கேள்விக்குப் போக [illegible] மருத்துவ ஆராய [illegible] தியை மாற்றுங்கள். அப்போ [illegible] என்பதுதா [illegible] லாம். [illegible] படிச செய்யு [illegible] வரு [illegible]

Visit of Banking Commission to Madras

[illegible] யிலே ப [illegible] எடுத்து [illegible]

[illegible]—Thiru N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) Whether the Banking Commission Chairman and Members visited Madras about 16th February, 1970; and

(b) if so, whether the State Government had any talks with them?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம்.

(இ) ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்த வங்கித் தொழில் பற்றிய ஆணைக் குழு தலைவர் அவர்களிடத்திலும், உறுப்பினர்களிடத்திலும் இந்த அரசாங்கம் எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடத்தியது? இந்த ஆணைக்குழுவிடம் நிதி ஒதுக்கீடு பற்றியும், வட்டி வீதங்கள் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா? ஆம் எனில் அதன் விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: 1969-ல் பாங்குகள் தேசிய மயமாக்கப்பட்டன. அதை அமல்படுத்துவதில் சிலவற்றை மாற்றியமைப் பதற்காக இந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டது. இதன் வேலைகள் பற்றி ஆங்கிலத்தில் படிக்கிறேன்.

The terms of reference to the Banking Commission are as follows:—

(i) to enquire into the existing structure of the Commercial banking system, having particular regard to size, dispersion and area of operation and to make recommendations for improving the structure;

(ii) to make recommendations for extending the geographical and functional coverage of the commercial banking system;

(iii) to make recommendations for improving and modernising the operating methods and procedures and the management policies of commercial banks;

(iv) to examine the cost and capital structure and to review the adequacy of available surplus and reserves, having regard to the developmental needs of the banking system and to make recommendations in the light of the findings;

(v) to review the existing arrangements relating to recruitment, training and other relevant matters connected with manpower planning of bank personnel and to make recommendations for building up the requisite professional cadre of bank personnel at all levels of management.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS